1969 மார்ச் 22]

சட்டப்பேரவைக் கூட்டம்.

* 411 வினு—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா :—

வருடத்தில் ஒரு முறை சட்டப் பேரவை கூட்டத்தை வசதியுள்ள மாவட்டங்களில் நடத்தும் உத்தேசம் ஏதேனும் ஆராய்வில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that a large number of legislators are finding it difficult to participate fully in the proceedings of the Assembly, will this Government at least consider the possibility of increasing the number of meeting days of the Assembly, as is happening in the neighbouring States ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது இருக்கிற இந்த நாட்களிலேயே மாண்புமிகு உறுப்பினர்கள் நேரம் ஆக ஆக சட்ட சபை நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்துவதில்லை என அறிகிறோம். நேற்று முன்தினம் கூட மாவட்ட நிர்வாக மானியக்கோரிக்கை விவாதத் தின்போது அப்படிப்பட்ட குறைபாடு இருந்தது. இன்னும் நாட்கள் அதிக மானல் உறுப்பினர்கள் களைப்பு அடைந்த விடுவார்கள் என்று கருது கிறேன்.

திரு. எஸ். முருகையன்: முப்பு ஊட்டியிலே சட்டமன்றம் கூட்டம் நடைபெற்றது. அப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வளவு பேர்கள் கலந்து கொண்டார்கள், அதற்குப் பணம் எவ்வளவு அதிகமாகச் செல வழிக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உதகமண்டலத்தில் 20–4–1959 முதல் 30–4–1959 வரைக் கூட்டம் நடந்தது. அதில் பயணப்படியில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்காக அதிகம் செலவானது ரூ. 12,343 உதகையில் நடந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் அதிகமாகக் கலந்து கொண்டதாகத் தெரியவில்லை. பட்ஜட் கூட்டம் சென்னையில் நடைபெற்றபோது குறைந்த பட்சம் 112 பேர்கள் வந்தார்கள் என்றால் உதகையில் 120 பேர்கள் வந்தார்கள். அதிகபட்சம் சென்னையிலே 159 பேர்கள் வந்தார்கள் என் றால் உதகையில் 156 பேர்கள்தான் வந்தார்கள். சராசரி சென்னையிலே 135 பேர்கள் வருகிறார்கள் என்றால் அங்கே 142 பேர்கள் வந்தார்கள். மொத்தத்தில் கலந்து கொண்டவர்கள் சென்னையில் 204 என்றால் அங்கே 170 பேர்கள்தான் கலந்து கொண்டார்கள்.

திரு. கே. வினயகம்—சட்டசபை உறுப்பினர்கள் பெரும்பாலும் விவா தத்தில் கலந்து கொள்ளாததற்குக் காரணம் " அங்கே போனாலும் பிரயோஜனமில்லை, ஐந்து நிமிஷம்தான் பேசுவதற்குத் தருகிறார்கள் " என்று கருதுவதாகத் தெரிகிறது. ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் யோசித்து அதிக நாட்கள் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கடந்த பல ஆண்டுகளாக 9 மணிக்குக் கூடி மானியக் கோரிக்கை விவாதம் நடைபெறும்போது மூன்று அல்லது நான்கு மணி வரையிலும் நடைபெறுகிறது. நேற்றையதினம் 4 மணி 10 நிமிஷத்திற்கு முடிந்தது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது, ஏனென்றால் அவர்கள் இங்கு இல்லை.

திரு. ப. மகாதேவன் : சென்னை நகரம் வடகோடியிலே இருக்கிறது. தென்கோடியில் இருக்கும் என்னைப்போன்றவர்களுக்கு உதவியாக இருக் கும்பொருட்டு சென்னையில் நடக்கும் சட்டப்பேரவைக் கூட்டத்தைத் திருச்சி யிலோ அல்லது மதுரையிலோ கூட்டுவதற்கு புனர் ஆலோசனை செய்வார் களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாவட்டம்தோறும் சட்டசபையைக் ட்டுகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஊட்டியிலே சட்டப் பேரவைக் கூட்ட வேண்டுமென்று ஒரு சாரார் வற்புறுத்தி வந்தார்களா ? ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலே கூட்டலாம் என்று சொன்னால், ஊட்டியிலே கூட்டுவார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் விரிக்கின்ற வலை என்று சொல்வது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது வலையாக இருந்தால் அதில் விழாத சாமர்த்தியம் நமக்கு இருக்கிறது.

திரு ஏ. பாலசுப்பிரமணியன்: : என் கட்சியைச் சேர்ந்தவர்கள் உதகையிலே கூடவேண்டுமென்று சொல்லவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இருக்கின்ற செலவை அதிகப்படுத்துகின்ற இந்த யோசனைக்கு நாங்கள் உடன்பாடல்ல.

திரு. கே. போஜன் : நேரம் ஆக ஆக உறுப்பினர்கள் இருப்பதில்லை எனவே நாட்களை அதிகமாக்கினால் சட்டசபை உறுப்பினர்கள் அதிகமாக வரமாட்டார்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது இருக்கிற நேரத்தை ஒரு மணி வரை வைத்துக்கொண்டு நாட்களை அதிகமாக வைக்கலாம் என்று கருதுகிறேன். இதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த யோசனையை வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : சட்டசபைக் கூட்டம் நீண்டநாட்கள் நடந்தால் அதிகமாக உறுப்பினர்கள் கலந்துகொள்ளாமல் இருப்பதனால் விட்டுவிட்டு இடை இடையே நடத்தினால் அதிக உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். ஆகையால் அப்படி நடத்த உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பாராளுமன்றக் கூட்டம் மூன்று மாதங்கள் தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர்: தலைவர் அவர்களே, உதகையிலே சட்டசபைக் கூட்டம் நடந்தபோது என்னுடைய கட்சியைச் சார்ந்த சட்டசபை தி. மு. க. உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை என்பது உண்மையா ? அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்போதிருந்த தி. மு. க. உறுப்பினர் 15 பேர்களும் அந்தக் கூட்டத் தொடரிலே கலந்து கொள்ளவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, சட்டசபை 9 மணிக்கு ஆரம்பிக்கிற காரணத்தினாலும், இடைவேளை சாப்பாட்டிற்குக் கலையாமல் இருக்கிற காரணத்தினாலும் பட்டினி கிடக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அந்த நேரத்தை மாற்றி அமைத்துப் பிற்பகல் 6, 7, 8 மணி வரை வைத்துக்கொள்வதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதில் இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. பிற்பகல் கூடுவதுபற்றிச் சொன்னார்கள். பிற்பகலில் பெரும்பாலும் மேலவைக் கூட்டம் இருக்கிறது. இன்னொன்று சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை. பட்டினிப் போடுவதாகச் சொன்னார்கள். அவர்கள் இடையிலேபோய் சாப்பிட்டு விட்டு வருவதை நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்.